Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 15

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
கோன்:389

National Tamil Daily

மலர் 10
இதழ் 268
தேசிய தினசரி

சாதிபரணம் சிலை ஐப்பசி 21 ஷஃபான் 14 புதன்கிழமை 6-11-68

ஈழநாடு சந்தா

மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

வாரப்பதிப்பு மாத்திரம்

மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00

முற்பணம் கட்டவேண்டும்.
தபால் மூலம் அல்லது ஆள் மூலம் அனுப்பப்படும்.

தேசிய உயர்கல்விச் சபையில் நம்பிக்கை இல்லை

பேராதனைப் பல்கலைக்கழக செனட் தீர்மானம்

கொழும்பு, செவ்வாய்

தேசிய உயர்கல்விச் சபையில் நம்பிக்கையில்லை எனத் தெரிவிக்கும் தீர்மானமொன்றை பேராதனைப் பல்கலைக்கழக செனட் சபை இன்று நிறைவேற்றியது. இக்கூட்டத்திற்கு பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் திரு. எம். ஜே. பெரேரா தலைமை தாங்கினார்.

இந்தேசிய உயர்கல்விச் சபை உயர்கல்வி சம்பந்தமாக ஆராய்வதற்காகக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டதென்பதும் இதன் தலைவராக டாக்டர் கலலசேகரா இருந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேசிய கல்விச்சபை உயர்கல்வியை குழப்பி வாழாக்கி விட்டதென்றும் உயர்கல்வி அமைச்சுள்ள சீர்கேட்டுக்கு இச்சபையே பொறுப்பென்றும் இப் பல்கலைக்கழக செனேட் தனது நம்பிக்கையின்மையைத் தீர்மானத்தில் தெரிவித்துள்ளது.

இக் கூட்டத்திற்கு தலைமைவகித்த பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் திரு பெரேரா முன்னாள் கல்வி அமைச்சரும் நிரந்தர கல்வியமைச்சரவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இ. போ. ச. ஊழியர் வேலைநிறுத்தத்தை கைவிட்டனர்

கொழும்பு, செவ்வாய்

நாடுமுழுவதும் பரவுமோ என எதிர்பார்க்கப்பட்ட இ.போ.ச. ஊழியர் வேலை நிறுத்தம் நேற்று கொழும்பில் 75 பாதைகளிலாகிய பிரயாணம் மாலை 3 மணியளவில் கைவிடப்பட்டது.

மீதோட்டமுல்ல பஸ்நிலையத்தில் ஆரம்பமான இந்த வேலை நிறுத்தம் இ.போ.ச தலைவர் தலையிட்டு ஊழியருக்கு பாதுகாப்பளிப்பதற்கான நடவடிக்கை எடுத்ததை தொடர்ந்து கைவிடப்பட்டது.

ட்ரக்கில் சென்ற பொலிஸார் விபத்தில் சிக்கினர்

கொழும்பு செவ்வாய்

குளியாப்பிட்டியில் ட்ரக் வண்டியில் சென்று கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கிறக் குடைசாய்ந்ததால் ஏற்பட்டவிபத்தில் சிக்கி காயமுற்றனர்.

இதில் சென்று கொண்டிருந்த 26 பொலிஸ் உத்தியோகத்தர்களில் இரு சார்ஜண்டுகள், 6 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பொலிஸ் சாரதியொருவர் ஆகியோர் சிலபம் ஆஸ்பத்திரியிலிருந்தபோது அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லொத்தர் விற்பனை செய்வதில்லை

ஆசிரியர் சங்க தீர்மானம்

கொழும்பு, செவ்வாய்

ஆசிரியர்கள் அதிருப்தி உடையவர்களாகிவிட்டார்கள். ஆசிரியர்களுக்குள் பலகரம் குடிகொண்டிருக்கிறது. சரியான நேரத்தில் அப்பலகரம் குழறிக் கொந்தளிக்கும்''

மேற்கண்டவாறு அகில இலங்கை ஆசிரிய சங்கவின் ஆலோசனைச் சபை கூட்டத்தில் 3-11-68-ல் திரு. ஆ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தேசிய ஆசிரியர் சங்கம் கருத்துத் தெரிவித்தது.

தொழில் புரியும் ஆசிரியர்கள் தொழிற் நாளதை அதிகரிக்கச்செய்ய சம்பள லீவு வழங்கக் கல்விப்பகுதி அவசியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக ஆசிரியர்களை மூன்று பிரிவாகப் பிரித்துச் சம்பளம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். [illegible]

(18ம் பக்கம் பார்க்க)

'ஆசியாவுக்கு இலங்கை முன்மாதிரியாக விளங்கட்டும்'

ராஜீவ்காந்தி விருப்பம்

மம்மலப்பிட்டி, செவ்வாய்

சமூகத்தில் ஏற்படும் பல பிரச்னைகளுக்கு இணக்கமான அறநெறிப்பாதையில் தீர்வுகள் காண்பதில் இலங்கை ஆசியநாடுகளுக்கு முன்மாதிரியாக இருந்துவர வேண்டும்.

இவ்வாறு அறமுறை புனருத்தாரண சபைத் தலைவர் திரு. ராஜீவ்காந்தி இன்று கொழும்பு சமுத்திரா ஹொட்டலில் நடைபெற்ற அறமுறை புனருத்தாரண ஆசிய எழுச்சி சபை ஆண்டுவிழாப்பணக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும்பொழுது வேண்டுகோள் விடுத்தார்.

செனட்சபைத்தலைவர் திரு. ஏ. ரத்னவாலமதுதலைமை யுரையில் சமுதாயப் புண்கள் பரவிவர நல்லெண்ணத்துடன் ஆராயப்படவேண்டுமென எடுத்துக்கூறினார்.

15 நாடுகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஹம்ப்ரிக்கு வாய்ப்பு?

வாஷிங்டன், நவ. 5

இன்று ஆரம்பமான அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி வேட்பாளரான ஹுபேர்ட்டை உப ஜனாதிபதி திரு ஹம்ப்ரிக்கு ஜனாதிபதியாகும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசு வேட்பாளரான திரு நிக்சனுடன் இவருக்கு சேத வீத வாக்குகள் மேலதிகமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

இத்தேர்தலில் 7 கோடி 50 லட்சம் வாக்காளர்கள் கலந்து கொள்கின்றனர். தேர்தல்முடிவு நாளை வெளியாகும்.

தமிழ் பதிவுகாரர்களுக்கு சிங்களத்தில் அழைப்பு

கவிபுரம், செவ்வாய்

அகில இலங்கை பதிவுகாரர்களுடைய வருடாந்த மகாநாடுக்கு கலந்து கொள்ளுமாறு வடபகுதியிலுள்ள தமிழ் பதிவுகாரர்களுக்கு தனிச்சிங்கள மொழியில் அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளனவாம். தனிச்சிங்கள மொழியில் நாள்கூட்டமும் நடைபெறும் என்ற எண்ணத்தால் வடபகுதியிலுள்ள சில பதிவுகாரர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லையென முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

ராஜேந்திரா நிறைசேரி காரியதரிசியாகலாம்

கொழும்பு, செவ்வாய்

நிறைசேரிக் காரியதரிசி திரு. ஜினதாசா சமரக்கொடி உலக வங்கியில் டைரக்டர் பதவி பெற்று செல்லவிருப்பதால் உதவிக் காரியதரிசியான திரு எம். ராஜேந்திரா இப் பதவியை ஏற்கவிருக்கிறார்.

திரு. ராஜேந்திரா முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திரு. எம். திருச்செல்வத்தின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரிஸ் சமாதானப் பேச்சுக்கள் கடைசி நேரத்தில் ஒத்திவைப்பு

பாரிஸ், நவ. 5

வடவியட்நாம் மீது அமெரிக்க குண்டுவீச்சு நிறுத்தத்தின் பின் பாரிஸில் நான்கு மீண்டும் ஆரம்பிக்கப்படவிருந்த விடயங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டதாக இன்றிரவு அறிவிக்கப்பட்டது.

தென்வியட்நாம் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இப் பேச்சுவார்த்தை [illegible] ஒத்திவைக்கப்பட்டதாகத் [illegible]

தேசிய விடுதலை முன்னணியின் தூதுக்குழு இப் பேச்சுவார்த்தையிலிருந்து [illegible] வதை தென்வியட்நாம் கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

தென்வியட்நாம் மக்கள் தமது எதிர்ப்பை ஆர்ப்பாட்டம் மூலம் தெரிவித்திருந்தனர். ஜனாதிபதி ஜொன்சனும் இதற்கு சார்பான கருத்தையே வெளியிட்டுள்ளார்.

மாலைதீவுப் பிரயாணிகள்

கொழும்பு, செவ். [illegible] கப்பலில் பல நாட்களைக் கழித்திருந்த 33 மாலைதீவுப் பிரயாணிகள் கொழும்பு வரையில் ஒதுங்கினர். இவர்களின் பாய்மரக்கப்பல் கொழும்புக் குடாவை வந்து அடைந்தது. இலங்கையில் மாலைதீவுத் தூதுவருக்கு இதுபற்றிய செய்தி தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

நன்றிகூறல்

எனது அருமைத் தகப்பனார் வைரமுத்து கதிரவேலு [பிரதிப்பூர் பெக்டரி] அவர்களின் சமாதியடைந்தமை பற்றியறிவுற்றுக் கடிதமூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எனது சார்பிலும் குடும்பத்தார் சார்பிலும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மகன் K. கிருஷ்ணன், சமரசிங்கம். 317

நல்ல முறையில் பயிற்சி பெற்ற CL வரிகொண்ட ஏஜெண்டிகளுக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: ஸ்ரீமுருகன் மாக்கான், கண்டி வீதி, வவுனியா. 315

தேவை

பணவசூலாளர்!

பண வசூலாளர் தேவை. ரொக்கப்பிணை செலுத்தக் கூடியவர்கள் மாத்திரம் 8-11-68 முன் எழுத்து மூலம் விண்ணப்பியுங்கள். விளம்பர இல. 155, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 155

விரைவில்

கிடைக்கும்

அச்சுவேலி, செவ்.

வடமராட்சி கல்முறவுச் சங்கத்தாரால் வல்லையில் அமைக்கப்பட்டுள்ள கல்முறவு வைத்திசாலைக்கு மின்சார விநியோகம், குழாய்நீர் விநியோகம் ஆகியன விரைவில் கொடுக்கப்படவிருக்கிறது.

பால்சபை

இறக்குமதி செய்யும்

கொழும்பு, செவ்.

அடுத்த ஆண்டுமுதல் மாதந்தோறும், நாள்தோறும் இறக்குமதி செய்துவந்த தனியார் வர்த்தக விநியோகங்களுக்குப் பதிலாகவோ சபை நாள்தோறுமே இறக்குமதி செய்யும்.

"ஆசிரியர்கள் மிகக் பொருத்தமானவர்கள்

சங்கானை, செவ்.

"சமாதானம் செய்யும் வாய்ப்பு எல்லோருக்குக் கிடைப்பதில்லை. சமாதானம் செய்பவர்கள் தேவனின் புத்திரர்களாவார்கள். சமாதான நீதவானாக நியமிக்கப்படுபவர்கள் ஆசிரியர்களாயிருப்பதைக் காண்கிறோம். அவர்கள் இதற்கு மிகப் பொருத்தமானவர்கள்" என வண்டைத்தரிப்பு வை.எம்.எல். ஏ. லாவிஸ்களினால் ஆண்மையில் வாழ். மாவட்டத்திற்குச் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்ட திரு. எஸ்.பீ. டயஸ் கொழும்புக்கு முன்னாக நடைபெற்ற மாராட்டு வைபவத்தில் வேலணையில் வண.எஸ். பி. விஜயரத்தினம் வேலணையில் குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. எஸ்.செல்வத்துரை திரு. எஸ்.ஜெயநேசன் ஆகியோரும் பேசினர்.

இலங்கை

ஒலிபரப்புக்

கூட்டுத்தாபனம்

புதன் 6—11—68

[செய்திகள்: காலை 7-00, மதியம் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீ அலை 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 வசனநற்சிந்தனை, 6-40 இன்னிசைநற்சிந்தனை, 6-45 திருப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைவேந்தன், 8-15 இன்னிசைநேரங்கள்.

344 மீ அலை 49 மீ

மதியம் 12-00 சிற்றரங்கம். 1-00 மாதர் கேட்டவை,

344 மீ அலை 61 மீ

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 காலமஞ்சரி.

இரவு 6-15 விண, 6-45 மாவலம், 7-00 சிரமசஞ்சிகை, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்.

வட்டுக்கோட்டையில்

வேலையற்ற

பட்டதாரிகள்

சங்கம் அமைத்தனர்

கழிபுரம், செவ்.

வடஇலங்கைப் பட்டதாரிகள் சங்க வட்டுக்கோட்டை கிளை அங்குரார்ப்பணக்கூட்டம், திரு. இ. அப்பாத்துரை தலைமையில் மாதர்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பட்டதாரிகளின் வேலையற்ற நிலையையும் சங்கம் தொடர்ந்து கடமையாற்ற வேண்டிய அவசியத்தையும் பற்றி தலைவர் குறிப்பிட்டார்.

குன்றக்குடியார்

பேச்சுக்கள்

நூலாகும்

கழிபுரம், செவ்.

ஆண்டையின் வாழ்ப்பாணத்துக்குவிஜயம்செய்து பல இடங்களிலும் சொற்பொழிவை நிகழ்த்திய நமது திரு குன்றக்குடி அடிகளாரின் பேச்சை நிரப்பி ஓர் நூலாக வெளியிட வழக்கம்பரை சனசமூகநிலையத்தினர் முடிவுசெய்துள்ளனர்.

கர்பிகள்

வெட்டப்பட்டன

கழிபுரம், செவ்.

வட்டுக்கோட்டை-பொக்குண வெளியிலுள்ள தந்திக் கம்பிகள் விஷமிகளால்வெட்டப்பட்டுவிட்டதால் கழிபுரம், மூளாய் ஆகிய இடங்களிலுள்ள தந்திசேவை முற்றாகத் துண்டிக்கப்பட்டுவிட்டன. ஒவ்வொருமாதமும் இரண்டு முன்று தடவைகள் இவ்விடத்தில் மேற்படிகம்பி வெட்டும் வேலைகள் நடைபெறுகின்றன.

இன்று

யாழ்ப்பாணம், புதன்

தேசியஅரசாங்க கூட்டுறவுச் சேவைத் தொழிலாளர் சங்கக்கூட்டம் இன்றுகாலைகேசரியுறை அரசினர் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. (ந. நி.)

ராஜா
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். - பானுமதி
நடித்த
காஞ்சித்தலைவன்
[புதிய கொப்பி]

ராணி
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-30
வைஜி - பானுமதி
நடித்த
அம்பிகாபதி
(இன்று மட்டும்)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
பிரீ போரா, போரா 2-30
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
நடித்த
பெற்றால்தான் பிள்ளையா

இணுவில்
ஸ்ரீ காளிங்கன்
தினசரி 6-30, 9-30
முத்துராமன் - தேவிகா
நடித்த
நெஞ்சில்ஓர் ஆலயம்

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7&9-45p.m.
Montgomerywood
in
ONE SILVER DOLLAR
[scope / color]

நாடகமுத்து

போட்டி பரிசுகள்

உடுவில், செவ்.

இலங்கை சாகித்திய மண்டலம் இவ்வருடம் நடத்திய தமிழ் நாடக எழுத்துப் போட்டியில் கவிஞர் இ. நாகராஜனுக்கு 2-ம் பரிசு கிடைத்துள்ளது. வெற்றி பெற்றோராக கலாநிலையம் செல்வன் எம் தேவராஜனுக்கு 3-ம்பரிசு கிடைத்துள்ளது

கொழும்பு சைவ மகாஜன சபை மண்டபத்தில் பரிசளிப்பு விழாவில் பரிசுகள் வழங்கப்படுவன

7வயது சிறுவன்

குத்தப்பட்டு மரணம்

அரியாலை, செவ்.

7 வயதுச்சிறுவன் கத்தியால் குத்தப்பட்டு மரணமானான்.

இச்சம்பவம் அரியாலையிலே நடந்துள்ளது.

இதுசம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். கொலை செய்வதற்கு உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் கத்திஒன்று பொலிஸார் வசமாகி யுள்ளது.

மாஸ்கர சேதுபதியின்

நூற்றாண்டு விழா

செங்கை, நவ. 5

தமிழ்ப்பேரறிஞர் மாஸ்கர சேதுபதியின் நூற்றாண்டு விழா இங்கு நவம்பர் 1-ம், 2-ம், 3-ம் திகதிகளில் இராமநாதபுரத்தில் கோலாகலமாக நடைபெற்றது. கவியரசுகளும், பொருட்பேரவைகளும் விழா நிகழ்ச்சிகளாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

2-ம் திகதி காலையில் நடந்த கவியரங்கில், பூண்டி அரங்கநாத முதலியார், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், கவாமி விவேகானந்தர் போன்றோர் மாஸ்கர சேதுபதியவர்களைச் சந்தித்துப் பேசும் கற்பனைக் காட்சிபற்றி மதுரைநேரூர், புதுவை கப்பிரமணியன், முத்து சண்முகம் ஆகிய ஏழு கவிஞர்கள் கவிபாடினர். திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. ப. ஜோதிநாதன், திரு. முனுசாமி, திரு. அவ்வை க. துரைசாமிப்பிள்ளை ஆகியோர் மாலை நடந்த பொருட்பேரவையில் பேருரை ஆற்றினர்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

யாழ்ப்பாண மாநகரசபை

தேர்தல் போட்டி

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் 23 வட்டாரங்களிலும் வெற்றிபெறக் அபேக்ஷகர்களின் பெயர்கள் சரியாக முறைப்படி எழுதுபவருக்கு 100 ரூபா பரிசு வழங்கப்படும். பரிசு பெறுபவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருந்தால் 100 ரூபாவும் பகிர்ந்து வழங்கப்படும். இப்போட்டியில் எவரும் கலந்துகொள்ளலாம். கீழே காணப்படும் கூப்பனைத் தெளிவாக நிரப்பி, 'தேர்தல் போட்டி' ஈழநாடு, த. பெ. இல: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். போட்டி முடிவுதிகதி 30-11-68

வட்டாரம்—பெயர்	வட்டாரம்—பெயர்
1.	13.
2.	14.
3.	15.
4.	16.
5.	17.
6. அ. த: துரையப்பா	18.
7.	19. எம்.ஏ.சி.எஸ்ஏ.காதர்
8.	20.
9.	21.
10.	22.
11.	23.
12.	

பெயர்: _____

விலாசம்: _____

_____

4-வது வாரம்
கிங்ஸ்லி பினாலா மைலன்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா [வட்டுநகர்]
★ எம். ஜி. ஆர். - ★ சரோஜாதேவி
அசோகன், நம்பியார், சந்திரபாபு, தங்கவேலு
இன்னும் பலர் நடித்த
ஆர். ஆர். பிக்சர்ஸ்



பறக்கும் பாவை
[சக்திமான் கலர்]
101-வது தினம்
லிடோ (பொறுப்பு) ராஜ் (நீர்கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்
(டெக்னிக்கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மானில் ராணுவ கொந்தளிப்பு: நாள்முழுவதும் தெருச்சண்டை

அடக்கிவிட்டதாக மன்னர் ஹுசேன் தகவல்

அம்மான், நவ. 5

நேற்று அம்மான் நகரில் பாலஸ்தீன இராணுவ அதிகாரிகள் நடத்திய ஒரு புரட்சியைத் தமது படைகள் நசுக்கி விட்டதாக ஜோர்தான் மன்னர் ஹுசேன் அறிவித்திருக்கிறார்.

பாலஸ்தீனத்தைச்சேர்ந்த சில இராணுவத் தளபதிகள் அம்மானில் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடினார்கள். நேற்று முழுவதும் நடைபெற்ற உக்கிரமான தெருச்சண்டையில் பலர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்று மாலையில் தெருவில் சண்டை ஒய்ந்துவிட்டபோதிலும் ஆங்காங்கே சிறு சிறு சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டே இருந்தன.

ஆயுதங்களும் குண்டுகளும் வைக்கப்பட்டிருந்த குதம் ஒன்றை பாலஸ்தீன படைகளில் ஒரு பிரிவினர் கைப்பற்றிக் கொண்டு இந்தப் புரட்சியைச் செய்தார்களாம். இந்தப் புரட்சிக்கு ஒரு குறிப்பிட்ட கமாண்டர் தான் பொறுப்பாய் இருந்திருக்கிறார் என்று மன்னர் ஹுசேன் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் கடந்த சண்டையின்போது பிடித்துக் கொண்ட பகுதிகளை மீட்பதற்கு இஸ்ரேலுடன் தொடர்ந்து போராட வேண்டும் என்று இந்தப் பிரிவினர் கோருகிறார்களாம்.

நேற்று நடந்த தெருச் சண்டையில் சுமார் 16 பேர் கொல்லப்பட்டதாகவும், 40 பேர் காயமடைந்ததாகவும் ஒரு செய்தி கூறியது. நூற்றுக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் கலைக்கப்பட்டுள்ளன. அம்மான் நகரில் ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

எல்லையில் சண்டை

இதற்கிடையில் ஜோர்தான் நதிக்குக் குறுக்கே ஜோர்தான் படைகளுக்கும், இஸ்ரேல் படைகளுக்குமிடையில் நேற்று தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. சேதங்கள்பற்றி விபரம் அறிவிக்கப்படவில்லை.

பந்தோபஸ்து சபை

இஸ்ரேலும் ஐக்கிய அரபுக்குடியரசுகளும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டித் தெரிவித்துள்ள புகார்கள் பற்றி நேற்று ஐ. நா. பந்தோபஸ்து சபை விவாதித்தது. அடுத்த வியாழக்கிழமை சபை மீண்டும்கூடி இப்பிரச்னையைப்பற்றி ஆராயும்.

மே. பெர்லினில் மாணவர் அட்டகாசம்

ஆயிரக்கணக்கானோர் பொலிசாருடன் மோதல்

லண்டன், நவ. 5

மேற்கு பெர்லினில் யுத்த காலத்துக்கு பிறகு எப்பொழுதுமே நடந்திராதவகையில் நேற்று மாணவர்களும் பொலிசாருக்குமிடையில் மிகவும் பயங்கரமான தெருச் சண்டை பொன்று நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டார்கள். எரியும் குண்டுகளையும் கற்களையும் பொலிசார்மீது வீசி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் சுமார் 100 பொலிசாரும் 20 மாணவர்களும் காயமடைந்துள்ளனர்.

ஜெனரல் கோல்ஸ்கி தலைமையான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி மேற்கு பெர்லினில் நடத்தும் வருடாந்த மகாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்.

சமீபத்தில் பாரிஸ் நகரில் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைப் போல் இது இருந்ததாம்.

கழிவுப் பொருட்களை உரமாக மாற்றும் யந்திரம்

பிரிட்டனில் கண்டுபிடிப்பு

லண்டன், நவ. 5

வீடுகளில் சேமிப்பாகும் கழிவுப் பொருட்களையும், குப்பைகளையும் அப்புறப்படுத்துவது இன்றைய நகரங்களைக் கழுத்தைநெரிக்கும் ஒரு கடுமையான பிரச்னையாகும். இந்தப் பிரச்னைக்கு விரைவுகாலமாக பிரிட்டிஷ் கம்பனி ஒன்று கண்டுபிடித்திருக்கும் ஒரு யந்திரம் எந்தவிதமான கழிவுப் பொருட்களையும் சிறந்த ரக உரமாக மாற்றிவிடுகிறது.

பர்மிங்காமிலுள்ளவோட்டர் என்றழைக்கப்படும் கொறியியல் கம்பனி இந்த இயந்திரத்தை உருவாக்கியுள்ளது. இந்த இயந்திரத்தில் எந்தவகையான கழிவுப் பொருட்களைக் கொட்டினாலும் சுத்தமானதும், சிறந்த ரகமானதுமான உரத்தை தயாரித்து விடுகிறது. 'கவிக்செயில்' எனப்படும் இந்த உரம் இன்றைய மார்க்கெட்டிலுள்ள ஏனைய உரங்களையும்விட மலிவானதாகும்.

இந்த இயந்திரம் மணிக்கு

சோவா

தேசிய வீரர்கள் விடுதலை?

புதுடில்லி, நவ. 5

போர்த்துக்கீசிய சிறைக்கைதிகளாக இருக்கும் சோவா தேசிய விடுதலை வீரர்களான திரு. சோவக்ரானடே, திரு. மஸ்கரனாஸ் ஆகிய இருவரும் விரைவில் விடுதலையடைந்துவிடவேண்டும் என்கிற தங்கள் விருப்பத்தையும், அவர்களது விடுதலை பற்றிய நம்பிக்கையையும் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா இன்று தெரிவித்துக்கொண்டார்.

மேற்றிராணித்துவ அபிஷேகம்

பண்டத்தரிப்பு, செவ். 21-ம் திகதி நடைபெறவிருக்கும்மேற்றிராணித்துவ அபிஷேகத்தை யாழ். மேற்றிராணியர் எமிலியானுஸ் பிள்ளையுடன் திருமலை மேற்றிராணியர் வந். இலங்கேஷியஸ் கிரெனி ஆண்டகை கிளாக கூட்டு மேற்றிராணியார் வந். மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகையும் நடாத்துவர்.

அனாதரவான நிலையில் கிடந்த சடலம்

புலோலி, செவ். 21-ம் திகதி புலோலி கிழக்கு எல்லைத் தண்ணீர் வாய்க்காலில் அனாதரவான நிலையில் இறந்து கிடந்தவரின் மரணம் குறித்து யாழ்ப்பாண நீதிவான் மரண விசாரணை அதிகாரி திரு. சூர். எஸ். இராமநாதன் அவர்களிலே மரணவிசாரணை நடாத்தினார். சாட்சியமளித்த அக்காவாய் தெற்கு க. சதாசிவம், இறந்துகிடப்பவர் வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த தம்பன் தங்கமணி என்று அடையாளம் காட்டினார். ஓரிடத்தில் இறந்த இடத்திலேயே மரணமேற்பட்டதென சாட்சியத்தின்மூலம் தெரியவந்தது.

பகுத்தறிந்தறை அரசினர் வைத்தியசாலை அதிகாரி டாக்டர் திரு. வ. தியாகராசா பிரேத பரிசோதனை செய்தார். இறந்தவர் மிகவும் உயரத்திலிருந்து விழுந்தால் ஏற்படக் அதிர்ச்சியினாலும், இருதயம், ஈரல் போன்றவை பாதிக்கப்பட்டமையினாலும் மரணம் சம்பவித்ததென பரிசோதனை அறிக்கை தெரிவித்தது. இறுதியில் தற்செயலாக ஏற்பட்ட மரணமென்று தீர்மானிக்கப்பட்டது.

புதிய நெசவு நிலையம்

ஊர்காவற்றுறை, செவ். 21 வேலணைமேற்கில் அமைக்கப்பட்ட நெசவுநிலையத்தை யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர் திரு எம். சபாரத்தினம் திறந்துவைத்தார். மேற்படி நிலையம் வேலணை மேற்கு கிராமமுன்னேற்றச்சங்கத்தில் ஆதரவில் நிறுவப்பட்டுள்ளது.

லத்தின் அமெரிக்காவுக்கு

எலிஸபெத் மகாராணி விஜயம்

லண்டன், நவ. 5

எலிஸபெத் மகாராணியார் ராயல் விமானப்படை விமானம் ஒன்றின் மூலம் பிரேஸிலின் தலைநகரான ரியோடிஜனீரோவுக்குப் போயுள்ளார். மகாராணியார் பிரேஸிலிலும், லிலியிலும் 10 நாள் கள்வரை சுற்றுப்பிரயாணம் செய்வார். மகாராணியார் வந்தபின் அமெரிக்காவுக்கு விஜயஞ்செய்வது இதுவே முதல் நடவடிக்கையாகும்.

தற்சமயம் மெக்ஸிகோ நகரிலிருக்கும் எடின்பரோ கோமகன் மகாராணியாரை ரியோ நகரில் சந்திப்பார். இதனைஅடுத்து அரச தம்பதிகள் 'பிரிதானியா' எனப்படும் உல்லாசக் கப்பலில் பிரேஸிலின் கரையோரப் பட்டினங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். இம்மாதம் 11ந்திகதி அரச தம்பதிகள் லிலியில் தலைநகரமான சந்தியாகோவுக்கு விஜயஞ்செய்வார்கள். 18ந் திகதி இருவரும் நாடுதிரும்புகிறார்கள்.

அமெரிக்காவின் அடுத்தஜனாதிபதி ஹம்ப்ரியா - நிக்ஸனா?

தேர்தல் சுறுசுறுப்பாக ஆரம்பம்

வாஷிங்டன், நவ. 5

இன்று அமெரிக்க மக்கள் தங்கள் நாட்டின் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான அரசியற் தலைவர்களைத் தெரிவு செய்யும் தேர்தலில் வாக்களிக்கிறார்கள்.

மிக முக்கியமான பதவியான குடியரசுத் தலைவர் பதவிக்குமட்டுமின்றி உப ஜனாதிபதி, சட்டசபை உறுப்பினர்கள், நீதிபதிகள் கவர்னர்கள் போன்ற பலபிரிவுகளுக்குமான முக்கியஸ்தர்களை இன்று அமெரிக்கர்கள் தெரிவு செய்வர்.

ஜனாதிபதி பதவிக்குபோட்டியிடும் முன்னாள் வேட்பாளர்களிலும் குடியரசுக் கட்சியின் வேட்பாளரான திரு. நிக்ஸனுக்கு மக்களிடை மோக ஆதரவு இருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர். அதேசமயம் உபஜனாதிபதிதிரு ஹம்ப்ரிக்குகடைசி நேரத்தில் ஆதரவு பலத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. மூன்றாவது வேட்பாளரான திரு. வாலஸ் அவேமாக 14 சதவிகித வாக்குகளைப்பெறுவார்என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வெற்றிக்கு அவசியமான வாக்குகள் எந்த வேட்பாளர்களுக்கும் கிடைக்காவிடில் போகுமட்சத்தில் புதிய ஜனாதிபதியைமக்கள்பிரதிநிதிகள் சபை தெரிவு செய்யும்.

பாரிஸ் பேச்சுக்கள் பற்றி ஹம்ப்ரி

பாரிஸில் அடுத்த புதன் கிழமை விரிவான ஆடிப்பட்டியில் ஆரம்பமாகும் வியட்நாம்பற்றிய அமைதிப் பேச்சுக்களில் தென்வியட்நாம் கலந்து கொள்ளாது போனாலும் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று உபஜனாதிபதியும் ஜனநாயகக் கட்சி வேட்பாளருமான திரு. ஹம்ப்ரி கருத்து வெளியிட்டிருக்கிறார் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும்படி அவர் தென்வியட்நாமைக் கேட்டிருக்கிறார்.

50 தொன் கழிவுப் பொருட்களை உட்கொண்டு ஒரு நாளில் 100 தொன் உரத்தை உற்பத்தி செய்யவல்லது.

இந்தக் கம்பனியின் அதிபர் திரு. கோர்க் இந்தஇயந்திரத்தின் செயலாக்கம்பற்றிக் குறிப்பிடுகையில், ஓர் உடைந்த நாற்காலியோ அல்லது பழைய இரும்புச் சாமானோ எதுவாக இருந்தாலும் அதனை அப்படியே நசுக்கிச்செய்து அருமையான உரமாக மாற்றி விடுகிறது இயந்திரமித்' என்றார்.

'ஆர்ப்பாட்டம் வேண்டாம்' ஜெனரல் தியூ கோரிக்கை

வடவியட்நாம் மீதுநடத்தப்பட்ட குண்டு வீச்சை அமெரிக்கா நிறுத்தியதற்கு எதிராகஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டாம் என்று தென்வியட்நாம் மக்களை தென்வியட்நாம் ஜனாதிபதி ஜெனரல் தியூ கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆர்ப்பாட்டத்திற்குப் பதில் ராணுவத்தைப் பலப்படுத்துவதற்கான செலுத்தும்படியும் அவர்மக்களைக் கேட்டுக்கொள்ளார். எதிர்காலத்தில் யுத்தம் ஏற்படுமென்று அவர்கூறியுள்ளார்.

நேற்றுவிடுதலை முன்னணியின் தூதுக்குழு இன்று பாரிஸ் வந்து சேர்கிறது. அமைதிப் பேச்சுக்களில் இக்குழு கலந்து கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஜனநாயகத்தை இயக்குவதற்கு பலதரப்பட்ட விஷயங்களைப்பற்றிய அறிவு முக்கியமல்ல; முறையான கல்விதான் அவசியம்.

— காந்தியடிகள்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box- 49, Jafina. Telephone: 389.

யாழ்ப்பாணம் கிழமை ஐப்பசி மாதம் 21-ந் திகதி
[6-11-68]

ஒற்றுமைக் குரல்

(1) "இன்றைய நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்ற கோரிக்கையை இன்றைத் தமிழ் அரசுக் கட்சி மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறது. (2) கடந்த இருபதாண்டுகளாக தமிழினம் அடைந்து வரும் இன்னல்கள் அத்தனைக்கும் காரணம் இந்த நாட்டில் பெரும்பான்மைச் சிங்களமக்கள் நிரந்தர ஆளும் இனமாகவும் சிறுபான்மையினர் ஆழப்படும் இனமாகவும் ஆக்கி வைத்திருக்கும் ஒற்றையாட்சி அமைப்பேயாகும். எனவே இந்த அரசியல் அமைப்பை மாற்றியமைக்க வேண்டும். (3) தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் அதே நேரத்தில் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தும் சமஷ்டி அமைப்பே சிறந்தது. (4) எனினும் எந்த உருவத்திலும் தமிழினத்தின் சுயாதீன உரிமையை நிலைநாட்டி இன்றைய ஆளப்படும் நிலையை மாற்றக்கூடிய ஓர் அமைப்பை ஏற்றுக் கொள்ளும் அடிப்படையில் தமிழ்மக்கள் ஒன்றுபட வேண்டும்.

இப்படி நான்கு அம்சங்களைக் கொண்டதாக தமிழரசுக்கட்சியின் செயற்குழு சென்ற ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்ற கூட்டத்தில் ஆராய்ந்து நிறைவேற்றிய ஒற்றுமைக் கோரிக்கையற்றிய தீர்மானம் விளக்குகிறது. இதைச் சுருக்கமாகச் சொன்னால் "இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் உரிமையுடன் வாழ வேண்டுமானால் சமஷ்டி ஆட்சி அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்" என்ற தமிழரசுக் கட்சியின் "சமஷ்டி" இலட்சியத்தை செயற்குழு மீண்டும் வலியுறுத்தியிருப்பதுடன் அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டுமென்றும் இதற்கு தமிழ்மக்கள் ஒற்றுமைப்பட வேண்டுமென்றும் தீர்மானம் கூறுகிறது.

தமிழ்பேசும் மக்கள் ஒற்றுமைப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல தமிழ்பேசும் மக்களின் நலனையும் உரிமைகளையும் பாதுகாக்க தமிழ்த் தலைவர்கள் ஒரு பொதுக் கொள்கைத் திட்டத்தினையாவது ஒற்றுமைப்பட வேண்டுமென்பதும் இன்றைய முக்கியமான கோரிக்கை. இன்றைய அரசியல் அமைப்புதான் சிறுபான்மையினர் உரிமைகளை இழந்து அவல நிலையை அடைவதற்கு முக்கிய காரணம் என்பது ஒருபுறமிருக்க நமது நாடு அரசியல் சுதந்திரமடைந்து இருபதாண்டுகளாகியும் இன்னும் பிரதானமான நிலையிலிருப்பதற்கும் இந்த அரசியல் அமைப்புதான் காரணமென்பது பெரும்பான்மைச் சமூகத்தவர் பலரது எடுத்துரையாகும். இன்றைய அரசியல் அமைப்பை மாற்ற வேண்டுமென்று சிறுபான்மையினர் மத்தியிலும் பெரும்பான்மையினர் மத்தியிலும் எடுத்து நிலவுகிறது. ஆனாலும் இருதரப்பினருக்கிடையிலும் அரசியல் அமைப்பைத் திருத்துவதிலும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதிலும் கருத்து வேற்றுமை இருக்கிறது. சிறுபான்மையினர் மத்தியில் கூட அரசியல் அமைப்பைத் திருத்துவதிலும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதிலும் கருத்து வேற்றுமை இருக்கிறது.

பொதுவாக நாட்டின் நலனுக்கும் குறிப்பாக சிறுபான்மையினருக்கும் பாதகமாக இருக்கும் இன்றைய அரசியல் அமைப்பைத் திருத்துவதில் அல்லது புதிய அமைப்பு ஒன்றை உருவாக்குவதில் இன்னமும் கருத்துவேற்றுமை நிலவுவது வரவேற்கும்நிலை அல்ல.

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் இழந்த உரிமைகளை மீண்டும் பெறவும் தமிழ்பேசும் மக்கள் ஒன்றுசேர வேண்டுமென்று தமிழ்ப் பேசும்கட்சிகளுக்கு பெரும்பாலும் பிரதிநிதித்துவம் வகிக்கும் இரு பெருந் தமிழ் அரசியல் கட்சிகளான தமிழரசுக்கட்சியின் தலைவர்களும் தமிழ் காங்கிரஸ் தலைவர்களும் கூறுகின்றனர். வேறைப் பேச்சுக்கள்மூலமும் அறிக்கைகள் மூலமும் இரு பெரும்தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும் "ஒற்றுமையே" எங்கள் நோக்கம். ஒன்றுசேரவாரீர்" என்று அழைப்பு விடுக்கின்றனர். தமிழ்பேசும் மக்கள் தங்கள் இழந்த உரிமைகளை மீண்டுமெற முடியாதிருப்பதுடன் இருக்கும் சில அற்பசொற்ப உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்ற வேண்டிய வசதிகளைச் செய்வதற்கும், தமிழ்ப்பகுதிகளின் அபிவிருத்திக்கும் கூட, தமிழ்பேசும்மக்கள் மத்தியில், தமிழ்த்தலைவர்கள் மத்தியில் நிலவும் வேற்றுமை இடையூறாக இருக்கிறது. தமிழ்பேசும் மக்களின் நலன் கருதி, தமிழ்ப்பகுதிகளின் அபிவிருத்திகளைக் கருதிக் கொண்டு, தங்களுக்கிடையிலுள்ள கருத்து வேற்றுமைகளை தமிழ் பேசும் தலைவர்கள், இந்த நெருக்கடியான, அவலமான சமயத்திலாவது சற்றுத்தப்பேசி, விட்டுக் கொடுத்து ஒரு நல்லதிட்டத்தை உருவாக்கவேண்டியது மிகமிக அவசியம்.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவருவதற்கு பெரும்பான்மைச் சமூகத்தினர் பூரண ஆதரவு அளித்ததுபோலவே சிங்களம் மட்டும் சட்டத்தை வடக்கு கிழக்குமாகாணங்களிலுள்ள தமிழ்பேசும் மக்களும் முற்றாக எதிர்த்தனர். எண்ணிலடங்கா சிறுபான்மையினரின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் பெரும்பான்மைச்சமூகத்தினரின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அரசியல் கட்சி, சிங்களம் மட்டும் சட்டத்தை 1956ம் ஆண்டில் நிறைவேற்றியது. ஜனநாயகம் பெரும்பான்மை ஜனநாயகம் என்ற அமைப்பைப்பெற்றுள்ளபோது இதுநடைபெற்றது அதிசயமல்ல. இப்போது தமிழ் மக்களின் நலனையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு தமிழ்த் தலைவர்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து ஒரே கொள்கைத் திட்டம் வகுத்து தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளையும் பெற்றுவிடுவதாக வைத்துக்கொண்டால் அதற்கு மாறான நடவடிக்கைகளை பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவைப் பெற்ற பெரும்பான்மைப் பலமுள்ள அரசியல் கட்சிகள் மேற்கொள்ள மாட்டாவென்பதன் என்ன நிச்சயம்?

எனவேதான் சிறுபான்மைமக்களின் தலைவர்களும் பெரும்பான்மை மக்களின் தலைவர்களும் நாட்டின் பொதுநலனைக் கருதி கொண்டு கடிப்பேசி ஒரு நல்ல முடிவுக்கு வந்தால் தான் நாடு முன்னேறும். இதுதான் ஜனநாயகம் [illegible]

தேர்தல் தினத்தன்று

செல்வாக்கைப் பிரயோகித்து வாக்குப்பெற முயல்வது குற்றம்

வாக்களிப்பு நிலையத்துக் கருகில் ஒலிபெருக்கி பாவிக்கக்கூடாது

தேர்தல் நடைபெறும் தினத்தன்று, எந்த நபரானது வாக்களிப்பு நிலையத்திலிருந்து வாக்மைல் தூரத்திற்குள் வாக்காளரிடமிருந்து செல்வாக்கை பிரயோகித்து வாக்கு சேகரிப்பது தேர்தல் சட்டத்தின்படி தடைசெய்யப்பட்டிருக்கிறது.

எந்த ஒரு வாக்காளரின் வாக்கைப்பாதிப்பதும், எந்தக்குறிப்பிட்ட அபேட்சகருக்கு வாக்களிக்கவேண்டாமென எந்தவாக்காளரையும் தூண்டுவதும் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், சுவர் ஓவியங்கள் அல்லது தேர்தல் சம்பந்தமான நோட்டிஸுகள் தேர்தல் கிளைகள் பார்வைக்கு வைப்பதும் விநியோகிப்பதுந்தடை செய்யப்பட்டிருக்கின்றன.

தேர்தல் தினத்தன்று எந்தநபரும் வாக்களிப்பு நிலையத்திற்குள் அல்லது, வாக்களிப்பு நிலைய வாசலில் அல்லது அருகிலுள்ள எந்த தனிப்பட்ட அல்லது பொது இடங்களில் ஒலிபெருக்கி பாவிக்கக்கூடாது.

வாக்களிப்பு நிலைய வாசலில் அல்லது கற்றூடவிலுள்ள எந்த ஒருதனிப்பட்ட இடத்திலும் அல்லது பொது இடத்திலும் கோஷங்கள் எழுப்பக்கூடாது.

மேற்கூறப்பட்ட செய்கைகளால், வாக்களிக்கவரும் எந்த நபரையும் அல்லது வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அல்லது கடமையாற்றும் மற்றவர்களுக்கும் இடைஞ்சல் ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது.

சம்பந்தப்பட்ட தேர்தல் உத்தியோகத்தர்களால் வழங்கப்படும் வாக்களிப்பு சீட்டு, தனிர்ந்த வேறு வாக்களிப்பு சீட்டுகளை எந்த நபருக்கானது வழங்குவதும், வாக்களிப்பு சீட்டுகளை விநியோகிக்குவதும், வாக்களிக்க முனைவதும் குற்றங்களுக்குட்பட்டவைகளாகும்.

வாக்களிப்பு சீட்டுகளுக்கு பதிலாக வாக்களிப்பு பெட்டிகளில், வேறு எதையாவது போடுவதும், வாக்களிப்பு நிலையத்திலிருந்து, வாக்களிப்பு சீட்டுகளை எடுத்துச் செல்வதும், வாக்களிப்பு பெட்டிகளை சேதப்படுத்துவதும், எடுத்துச்செல்வதும் திறப்பதும் அல்லது வாக்களிப்பு பெட்டிகளில், அல்லது வாக்களிப்பு சீட்டுகள் கொண்ட கட்டுகளில், தங்கியிடுவதும், வாக்களிப்பு சீட்டுகள் சம்பந்தப்பட்ட குற்றங்களாகும்.

எந்த ஒரு நபரும், ஓர் அபேட்சகரை, தேர்தலுக்கு கொண்டுபோகும் வாகனத்தைத் தவிர, வேறு எந்த தனிப்பட்ட அல்லது பொதுக்கூட்டங்களில், கொடிகளையோ அல்லது சுவரோட்டிகளையோ கொண்டுசெல்லக்கூடாது.

அபேட்சகருக்கு சாதகமாக ஒரு கூட்டம் நடைபெறும் இடத்தைத் தவிர, வேறு எந்த மக்களுக்குச் சொந்தமான பொது இடங்களிலும், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், சுவரொட்டிகள் நோட்டிஸுகள் எதையும், மக்கள் பார்வைக்கு வைக்கக்கூடாது. இவைகளை பொது வீதிகளிலோ, அல்லது வீதிகளின் குறுக்கேயோ எழுதவோ, அல்லது பார்வைக்கு வைக்கவோ கூடாது. மேற்கூறியவை தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

அவர்கள் பார்வையில்

தி. ஆ. பெ. விசுவநாதம் தி. மு. க. தலைவராம்

'லங்காதீப' கடந்தமாதம் 29-ம் திகதி வெளியிட்டுள்ள ஒரு செய்தி பின்வருமாறு:

துறைமுகத்தில் நிற்கும் கப்பல்களிலுருந்து சாமான்கள் கடத்தப்படுவது தீவிரமடைந்திருப்பதைத் தடுப்பதற்கு பொலிசாரும் கடற்படையினரும் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு திட்டம் தீட்டியுள்ளனர்.

ஹெந்தல, முதலாம், மத்தள ஆகிய இடங்களில் இந்தக் கள்ளக்கடத்தல் நடைபெறுகிறதாம்.

தொண்டமான் தயாராகிறார்

பொதுத் தேர்தலுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தயாராகிக்கொண்டிருக்கிறார். அவர் தமது எல்லா கிளைகளுக்கும் போய் டி. எல். பிக்கும் ஆதரவுதேட எல்லா முயற்சிகளும் எடுக்கும்படி தெரிவித்துள்ளார். அடுத்த தேர்தலில் தமிழ் வாக்குகள் மற்றக் கட்சிகளுக்குப் போய் வீணாக்கூடாதென்று அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு 29-ந் திகதி அந்த செய்தி கொள்று கூறுகிறது.

தினமலை 30-ம் திகதி வெளியிட்டுள்ள ஒரு செய்தி:

இலங்கை அரசியல் சட்டத்தின் 29-வது ஷரத்து மதமோதல்கள் ஆலயங்களின் பணநடமாட்டம் பற்றி ஆராயும் உரிமையை அரசாங்கத்துக்கு இல்லாமல் செய்துவிட்டது என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தத்துவப் பேராசிரியர் திரு. கே. எம். ஜயத்திலக்கா கூறியிருக்கிறார். பௌத்த நிலையங்களின் பண விஷயங்கள் பற்றி மட்டும் ஆராய இடமளிக்கிறதாம் இந்த 29-வது ஷரத்து.

இன்னுமொரு தி. மு. க. தலைவர்

'ஆத்த' 30-ம் திகதி பின்வரும் செய்தியை வெளியிட்டிருக்கிறது. நவம்பர் 17-ம் திகதி மேலும் ஒரு தி. மு. க. தலைவர் வரவிருக்கிறார். கே. ஏ. பி. விசுவநாதன் என்பவரே ஆவர்.

இலங்கையில் அவர் தங்கியிருக்கும் ஐந்து நாட்களில் நுவரெலியா பண்டாரவளை மாத்தளையிலுள்ள தோட்டங்களில் 'நாம் தமிழர்' இயக்கத் தலைவர்களைச் சந்திப்பார். கதிர்காமத்துக்கும் அவர் போவார்.

'ஆத்த' வெளியிட்டுள்ள இன்னுமொரு செய்தி:

சிங்களத்தில்எழுதப்பட்ட காசோலைகளை வடபகுதியிலுள்ள கடுறுவுவ ஸ்தானங்களும் சிங்களவர் அல்லாதாரும் அரசாங்கத்திடமிருக்குத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இனிமேல் அரசகரும மொழி ஆணையாளர் காசோலைகள் சிங்களத்தில் எழுதப்படவேண்டும் என்று விடுத்த உத்தரவு முறியடிக்கப்பட்டுள்ளது.

ஹோப் கப்பலில் வந்தவர்கள்உளவாளிகளாம்

சப்பிரகமுவ பகுதியிலும் சிங்கள மாஜனக்கட்சியின் கிளைகளை நிறுவ அதன் தலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயகா உத்தேசித்திருக்கிறார். இதைத் தொடர்ந்து நிலத்தில், இரத்தினபுரி, கொழும்துறைக்குவாசல் ஆகிய இடங்களிலும் கட்சிக் கிளைகளை நிறுவுவதற்கு அவர் தீவிர முயற்சி மேற்கொண்டிருப்பதாக 'ஜனதா' கடந்த மாதம் 31ந் தேதி இதழில் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

உறவினருக்கு பதவிகள் கொடுத்தாராம்

தொழுவரை பதோக்கக் கூட்டுறவுச்சங்கத்தில் மட்டி நுவரை பாராளுமன்ற உறுப்பினர் திரு. களிஸ் அபயசுந்தரா தலைவராக இருந்த காலத்தில் தமது உறவினருக்குப் பதவிகளைக் கொடுத்தமை பற்றியும், நிறைந்திருந்த ஊழல்களைப் பற்றியும் விசாரணைசெய்ய கூட்டுறவுக் கமிஷனர் திரு. வி. பி. கொடவத்தை எண்ணியிருக்கிறார். மேற்படி நடவடிக்கையில் முதற்கட்டமாக மூவர்கொண்ட விசாரணைக் குழுவொன்றையும் அவர் நியமித்திருக்கிறார். குழு தொடர்ந்து ஒன்பது நாட்களாக விசாரணை நடாத்தியிருக்கிறது. இச்செய்தியை 'ஆத்த' பத்திரிகை அதன் நவம்பர் 1ந் திகதி இதழில் பிரசுரித்திருக்கிறது.

உளவாளிகள்

அமெரிக்க ஹோப் கப்பலில் வேலைசெய்வதற்கென இங்கு வந்துள்ள உளவாளிகளின் தொகை கடந்த சில மாதங்களாக அதிகரித்திருக்கிறது. கட்டுநாயக்கா, ரத்[illegible]

"மீண்டும் வேலை கொடுப்போம்"

கொழும்பு, செவ்.

ஐ.தே. கட்சியினால் வேலை நீக்கம் செய்யப்பட்ட 125 ஆசிரியர்களும் தமது அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும்போது மீண்டும் வேலையில் அமர்த்திக் கொள்ளப்படுவார்களென்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயகா தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...த்து ...ற்றம் ...ருகில் ...டாது

...ம் இடத்தை தவிர, ...எந்த மக்களுக்குச் ...தமான பொது இடம் ...ம். தண்டுப்பிரசாரம் ...கலோக ஆஃபீஸ்கள், ...ராஃபிக்கள் நோட்டீஸ் ...வற்றையும், மக்கள் ...க்கு வைக்க ...த. இவைகளை பொது ...விலோ, அல்லது விதி ...குறுக்கேயோ எழு ...ர். அல்லது பார்வைக்கு ...கேயோ கூடாது. மேற் ...வை தங்களுக்குரிய ...க்களாகும்.

...வநாதம் ...வராம்

...கும் கிராமவாசிகள் ...தாரும் அரசாங்கத்தி ...கும் திருப்பி அனுப்பு ...கள். இதனால் அரசாங்கமும் ...ழி ஆணையாளர் ...ர்களும் சிங்களத்தில் ...ப்படவேண்டும் என்று ...த உத்தரவு முறி ...ப்பட்டுள்ளது.

...பலில் ...வாளிகளாம்

...னை விமான நிலையம் ...றிவைத்திருக்கும் இவர் ...ன் எண்ணிக்கை சுமார் ...டாயிரமெனவும் கணி ...செய்யப்பட்டிருக்கிற ...விமானநிலைய அதிகாரி ... இதுபற்றி விளக்கம் ...டுக்கமுடியாதபடிதடை ...ப்பட்டிருக்கிறார் ...ம், புதிய ஆமெரிக்க ...ளிகளுக்கும், இவர் ...க்குமுள்ள தொடர்பு ...யும், பொதுத்தேர்தல் ...க்கிற இக்கட்டத்தில் ...த. எடிக்குச் சார்பா ... இவர்கள் இருப்பார் ...றும் 'மௌபீம்' ...ல் 17 ந் தேதி ...மி கூறுகிறது. ...வொரு வாரமும் ஹோப் ...லிலிருந்து இரண்டே ...ரே சுவப்பெட்டிகள் ...ப்படுகின்றன. சுவப் ...டியாதலால் பரிசிக்க ...மையைற்றியும், அதன் ... இலங்கைப் பொருள் ...ட்டுத்தப்படுவதாகத் ... சந்தேகிப்பதாகவும் ...ழும்பு அதிகாரியொரு 'மௌபீம்'வுக்கு அறி ...தாகவும் மேற்படி ...ம் தன் முதற்பக்கத்தில் ...ரித்திருக்கிறது.

'மீண்டும் வேலை கொடுப்போம்''

...சொழும்பு, செவ். ...தே. கட்சியினால் வேலை ...செய்யப்பட்ட 125 ...ர்களும் தமது அர ...கம் அதிகாரத்துக்கு ...போது மீண்டும் வேலை ...அமர்த்திக் கொள்ளப் ...வர்களென்று எதிர்கட் ...தலைவி திருமதி பண்டா ...க்கள் தெரிவித்திருக்கி ...

ஆசிரியருக்கு கடிதங்கள்

"நாடு நலம் பெறச் செய்ய முன்வருக"

நற்போது இலங்கையில் வட மாநிலம் முழுவதும் கல்ஞராட்சி மன்றங்களின் தேர்தலுக்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்றவாகுகின்றன- எங்கும் தேர்தல் என்பதே பேச்சாக இருக்கிறது. தேர்தலில் போட்டிடுவோர் வரிந்து கட்டிக்கொண்டு வாக்கு வேட்டைக்கு ஆயத்தமாகின்றனர்.

இந்நிலையில் வாக்காளப் பெருமக்கள் மிகவும் பொறுப்புடனும் அமைதியுடனும் நடந்து கொள்ளவேண்டியுள்ளனர். தங்கள் பொன்னான வாக்குச்சீட்டுக்களை நல்லமுறையில் பயன்படுத்தி சென்றகாலங்களை ஆராய்ந்து, உய்த்துணர்ந்து செயல்பட்டு அடுத்துவரும் உள்ளூராட்சிமன்ற நிர்வாகங்களை மேலும் நல்ல முறையில் அமைப்பதற்கு ஏற்றவகையில் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல் அவசியம்.

ஆர். பி. ஹரன்
சோப்பாய்

0 0 0

சமூக மாற்றம் வேண்டும்

இலங்கை, பொருளாதார சுதந்திரத்தை விரைவில் அடையவேண்டுமெனபேசப்படுகிறது. ஆனால் பேச்சிலும் பொருளாதார சுதந்திரத்தை அடைமுடியுமா? இந்தச் சுதந்திரத்தை நாம் அடைவதற்குக் கடின உழைப்பு அவசியம், மனித சக்தி வேண்டும். இலங்கை போன்ற நாடுகளில் இயற்கை வளங்களை அவசியமாகக் கட்டுமே மனித சக்திக்குப் பதிலாகப் பாவிக்கவேண்டும். அன்றேல் பொருளாதார சுதந்திரத்திற்காக முயற்சிக்கும்போது வேலையில்லாப் பிரச்னை இன்னும் அதிகமாகும். சமவாய நாடுகள் உழைப்பதற்கு ஆர்வம் மிக்க. ஆனால் கடின உழைப்புக்குப் பின்வாங்குகிறார்கள். உடம்பை அலட்டாமல் சொகுசாக வேலைசெய்வதையே பலரும் விரும்புகிறார்கள். நமது சமூகம், கடின உழைப்பாளிக்கு உரிய மதிப்பைக் கொடுப்பதில்லை. வழியில் நடந்து சேற்றில் உழன்று, செந்நெல்மணி களை எமக்கு அள்ளித்தரும் விவசாயியைவிட பகட்டாக ஆடையணிந்து தெருவளக்கும் வாலிபருக்கு மதிப்பதிகம், ஒரு சொகுசான உத்தியோகம் பார்ப்பவருக்கு மதிப்பதிகம். இந்நிலை மாறவிடில் கடின உழைப்புக்கு எவரும் பின்வாங்கவே செய்வர். கடின உழைப்பின்றேல் பொருளாதார சுதந்திரத்தை நாம் எவிலும் காணமுடியாது. பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்குச் சமூகத்தில் இந்நிலை மாறவேண்டும் அல்லது மாற்றி அமைக்கப்படவேண்டும். சொகுசான வேலை செய்பவரைப் போற்றும் இந்தச் சமுதாயம் கடின உழைப்பாளியைத் தலைமேல் அல்லவா தூக்கிவைக்க வேண்டும். தலையில் தூக்கி வைக்காவிடினும் இழிவாக்க ஆவது இருக்கக்கூடாதா?

க. பிற்றர்
சாவகச்சேரி.

நன்றி தெரிவிக்கிறது

உரும்பிராய், புதுக் தமிழ்தீவு பிரபாணிகள் சபை தீவுப்பகுதி எம் பி திரு நவரத்தினத்துக்கு நன்றி தெரிவித்துள்ளது ஆட்சி மன்றத்தில் தீவுப்பகுதி மக்கு சேவையற்றி திரு நவரத்தினம் எடுத்துக் கூறி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டிருந்தார்.

இது சம்பந்தமாக மேலும் நடவடிக்கை எடுக்குமாறும் பிரபாணிகள் சங்கம் கோரியுள்ளது.

பண்டார வன்னியனுக்கு அஞ்சலி

சங்கானை, செவ்வாய் ஆக்கிரமிப்பாளர் எதிர்த்த வன்னி மாவீரன் பண்டார வன்னியனுக்கு அஞ்சலி செலுத்தினார்கள் சங்கானை இளைஞர்கள். சங்கானை இளைஞர் பகுத்தறிவுக் கழகத்தின் வாராந்தக் கூட்டம் நடைபெற்ற போது மறைந்த மாவீரன் நினைவு தினங்களை ஆண்டு தோறும் கொண்டாட வேண்டியதன் அவசியத்தையும் எழுந்த தமிழ் வீரர்களின் சிறப்பு மிகு வீரவரலாற்றை ஆராய்ந்து வெளியிடவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி திரு. மு. முருகானந்தம் பேசினார்.

அடுத்த ஆண்டில் மிகக் கோலாகலமான முறையில் பண்டாரவன்னியனுக்கு விழா எடுக்கவும் கழகம் முடிவு செய்துள்ளது. மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, மன்னார் என்று தமிழ் மக்களைக் கூறு போட்டு ஆரசியல் வாதிகள் பயன் காண்பதைக் கண்டித்தும் தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டது.

தாஷ்கண்ட் திரைப்படவிழா

தாஷ்கெண்ட், நவ. 5 ஆசிய ஆபிரிக்க அரசாங்க நாடுகளின் பிரதிநிதிகள் பிரியா விடை கூறிக்கொண்ட பின்னர் தாஷ்கெண்ட் 68 என்று எழுதப்பட்ட திரைப்படச் சுருள் சூழ்ந்த பூமியின் படம் பொறிக்கப்பட்ட வெள்ளொடிகளை மண்டப மம்பத்தி விருந்து இறக்கப்பட்டன

தாஷ்கெண்ட் திரைப்பட விழாவில் 49 நாடுகள் கலந்துகொண்டன. 11 தினங்களாக நடந்த இந்த விழா விடுபோது ஆறு உலகெங்கு நாடுகளில் 111 படங்கள் திரையிடப்பட்டன.

சிவாஜிகணேசன் மகள் திருமணம் நடந்தது

சென்னை, நவ. 5

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகளின் திருமணம் நேற்று சென்னையில் நடைபெற்றது. சென்னை ஆயிரம்விளக்கில் இத்திருமணம் நடைபெற்றது.

சிவாஜியின் மகள் சாந்தி நாயகியை திரு. நாராயண சுவாமிமணம்செய்து கொண்டார்.

இத்திருமணத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு ஸி. சுப்பிரமணியம் திரு. காமராஜர் உட்பட அரசியல் சினிமா உலக பிரமுகர்கள் பலர் வந்து கொண்டனர்

பிரதமர் இந்திரா காந்தி, உபராஜ்டிரபதி திரு. கிரி, மத்திய மந்திரிகள் திரு. சவான், ஜகஜீவன்ராம், திரு. ஸ்வரன்சிங் ஆகியோரும், மற்றும் பலரும் வாழ்த்தி செய்திகள் அனுப்பியிருந்தனர்.

நாட்டிலும் நகரிலும்

ஐப்பசி 15 உத்தியோக பூர்வமான மாரிகாலம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தது. அதற்கு அறிகுறியாக வடநாடு முழுவதிலும் இரண்டு நாட்களாக மழை பெய்தது. மப்பும், மந்தாரமும் இன்னும் இருக்கிறது. பேய் வருடத்தைப் போலல்லாமல் இவ்வருடம் முன் மழையின் குறைவு. ஆனையிறவுக்கப்பாலுள்ள வன்னிப்பகுதியில் நல்ல மழை பெய்திருந்தபோதிலும் வானம் வாய்த்த பூமியாகிய யாழ்ப்பாணத்துக்கு இதுவே நிலம் குளிர்ந்த முதலாவது மழை.

பெரும்பாலான கமக்காரர் பெரிய மழையை எதிர்பார்க்காமல் புழுதி விதைப்பு விதைத்திருந்தார்கள். சிறு சிறு மழைத் தூற்றல் அவ்வப்போது இருந்து வந்தபடியினால் வளர்ந்த நெற்பயிரை மிஞ்சிக்கொண்டு புல்லும் பூடும் எதேஷ்டமாக வளர்ந்துவிட்டன. நல்ல மழை பெய்து நிலம் நனையாமல் களை பிடுங்க முடியாதிருந்தவர்கள் இம் மழையைக் கண்டதும் வெகு முமுரமாக களை பிடுங்கத் தொடங்கிவிட்டார்கள்.

பல இடங்களில் மழை இல்லாமையினால் முளைத்த பயிர் வாடிக் கருகிப் போய் விட்டது. வேறு சில இடங்களில் இளம் வயதில் போஷாக்கு இல்லாத குழந்தைகள் போல பயிர்கள் முச்சந்றுப் போய்விட்டன. இப்படி பயிர் அழிந்தவர்கள் இனிமேல் உழுது விதைப்பது சாத்தியப்படாது. பயிர் வாடுதாக நடவேண்டும். நாற்றுப் பயிர் வாடுதி நடுவதாக விலைக்கு கடுவாக கிடைக்குமாயினும் நாற்று எத்தேநரமும் கிடைப்பதரிது. நாற்றுக்காக, நடுகைக்கூலி என்ற சங்கடங்கள் வேறு. அரசாங்கம் விதைநெல் என்றும் உரம் என்றும் எவ்வளவு தான் உதவி செய்த போதிலும் மழையையும் உதவ முடியுமா?

களை பிடுங்கும் தொல்லை யாழ்ப்பாணத்துக் கமக்காரருக்கு வருடா வருடம் ஏற்படும் தொல்லை. வன்னி முதலிய பிற இடங்களிலும் களை வளருகிறது தான். ஆனால் அவ்வருடங்களில் களை பிடுங்குவதில்லை. ஏக்கர் கணக்கான காணிகளில் களை பிடுங்குவது பொருளாதார சாத்தியமாகாது. நெல் விதைவடை செய்யும்போதும் வளர்ந்த புல் பூண்டுகளுக்கு மேலே புல்லை எரிவை மட்டும் கொய்துகொண்டு கட்டைகளையும் புல்லையும் நிலத்தோடு சேர்த்து உழுது பசளையாக்கிவிடுவார்கள்.

ஒவ்வொரு வருடமும் புல் பூண்டுகள் விதைவைக்கு முன்பே அவற்றைப் பிடுங்கி எடுத்துவிடுகிறார்கள். அப்படி இருக்கத்தக்க தாக மற வருடமும் புல் பூண்டுகள் முளைத்துவிடுகின்றனவே? இது எப்படி உண்டாகிறது? குடிமனைகளிலிருந்தும் களை பிடுங்கப்பட்டதோ வேறு வயல்கள் தரவைகளிலிருந்தும் புல்லும் கொட்டைகள் வெள்ளத்தோடு அள்ளுப்பட்டு வந்து சேருகின்றனவா? அல்லது காற்றோடு அள்ளுப்பட்டு வருகின்றனவா? இப்படியும் நடக்கலாம். ஆனால் இவற்றைவிட முக்கியமான காரணம் இன்னுமொன்றுண்டு.

அரசாங்கத்திடம் செலவுக்கூலி வாங்கி வயல்களில் போடுகிறவர்கள்கூட வீடுகளில் சேரும் எருக்குப்பை முதலியவற்றையும் வீணாக விருப்பாமல் வயல்களில் தூவிவிடுவார்கள். வாடுகள்தோறும் புல் பூண்டு முதலியவற்றிலுள்ள விதைகள் சாணத்தோடு சேர்ந்து சிரமிக்காமல் வெளியே வருகின்றன. சாணம் எவ்வளவுதான் காய்ந்த போதிலும் புல் விதைகள் அப்படியே முழுதுபடாமலிருந்து சாணத்துடன் மழைவரும் வயலுக்குள்போய் சேர்ந்து விடுகின்றன. இப்படியே வீடுகளில் சேரும் குப்பைகளிலும்புல்பூண்டுவிதைகள் தொத்திக்கொண்டு வயலுக்குள் போகின்றன. இதனால்தான் வருடாவருடம் பணம் செலவழித்து களை பிடுங்கினாலும் களைகள் அறவே ஒளிந்துவிட முடியாதிருக்கின்றன.

இதற்கென்ன பரிகாரம் செய்யலாம்? இயற்கை உரங்களான சாணி குப்பை முதலியவற்றை அறவே போடாமல் விடவேண்டும். செயற்கை உரத்தையே பாவிக்கவேண்டும். இது எல்லோருக்கும் முடியுமா, எல்லோரும் விரும்புவார்களா? காணியும் குப்பையும் சுமார் வீடுகளில் சேருகிறது. உரத்துக்கோ பணம் வேண்டும். எல்லா கமக்காரரிடமும் உரத்துக்கு வேண்டிய பணம் இருக்கிறதா? கிலர் செயற்கை உரத்தை முற்றிலும் வெறுக்கிறார்கள். அது நிலத்தைப் பழுதாக்கிவிடும் என்பார்கள். ஒருதடவை உரம் போட்டால் தொடர்ந்து ஆண்டுதோறும் போடவேண்டுமென்பார்கள். களை பிடுங்குவதற்கு காசு செலவழித்தாலும் வரக்கூடிய வருமானம் இயற்கை உரம் போடுவதே சிறந்ததென்பார்கள்.

—வழிப்போக்கன்.

'ஈழநாடு' மாணவர் கட்டுரைப் போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு 'ஈழநாடு' மாணவரிடையே கட்டுரைப் போட்டிகளை நடாத்தவிருக்கின்றது.

அகில இலங்கை அடிப்படையில் போட்டிகள் நடாத்தப்படும். மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு என போட்டிகள் இரு பிரிவாக அமையும். மேற்பிரிவுக்கான போட்டிக் கட்டுரைகள் 1000 சொற்களுக்கு மேற்படாமலும், கீழ்ப்பிரிவுக்கான கட்டுரைகள் 700 சொற்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

கட்டுரைக்கான தலைப்புகள்

மேற்பிரிவு: காந்தியும் பத்திரிகையும்.
கீழ்ப்பிரிவு: காலத்தின் கண்ணாடி.

போட்டி முடிவு திகதி:15-11-68.

போட்டிகளில் பங்குபற்றுவோர் இதுவரை வெளியாகியிருக்கும் கூப்பன் நிரப்பி, தமது விஷயங்களுடன் அனுப்பிவைக்கவேண்டும். மாணவர்கள் பாடசாலை அதிபரால் கட்டுரை ஊர்ஜிதம்செய்யவேண்டும். கீழ்ப்பிரிவில் 18 வயதுக்குப்பட்ட மாணவர்களும் மேற்பிரிவில் 28 வயதுக்குப்பட்ட மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

ஈழநாடு 10வது ஆண்டு விழாப் போட்டி

பெயர்: _____
விலாசம்: _____
_____
போட்டியின் பெயர்: _____
பிரிவு: _____
வயது: _____
_____ _____
திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விஞ்ஞானமும் நாமும் ஒன்றாக வேண்டும்"

விஞ்ஞான கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழாவில் பேச்சு

சுழிபுரம், செவ்வாய்

"விஞ்ஞானமேறு வாழ்வு வேறு என்று கருதாமல் இரண்டும் ஒன்றோடு ஒன்றாக பிணைப்படவேண்டும் உலக அதிசயங்களில் ஒன்றான தஞ்சை கோபுர அமைப்பு, இலங்கையிலுள்ள பழைய குளங்களின் அமைப்பு போன்ற நுட்பங்கள் எல்லாம் இன்றுள்ளவர்கள் அதிசயிக்கப்பட வுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளன விஞ்ஞானம் என்றவுடன் ஏதோ எமக்கு அப்பாற்பட்டதாக நம்மில் பலர் எண்ணுகின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும். அப்போதுதான் விஞ்ஞானமும் நாமும் ஒன்று என்பதை அறிவோம்.

இவ்வாறு திரு. மு. சிவராசாவின் 'விஞ்ஞான கட்டுரைகள்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டுவைத்துப் பேசிய திரு. வி. பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

பண்ணாகம் மெய்கண்டார் வாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு வடக்கு கல்விமன்றத் தலைவர் திரு. இ. அப்பாத்துரை தலைமைவகித்தார். திரு. க. வரதேவன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. வி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில், பஞ்சாங்கம் ஒவ்வோர் வீடுகளிலும் இருக்கின்றது. ஆனால் ஒரு வீட்டிலாவது காச்சல் வார்க்குக்கருவி இருக்கவாய்ப்பாடாது. இன்றைய விஞ்ஞானம் கற்பிக்கும் எத்தனையோ ஆசிரியர்கள் பலவி சொல்வதையும், பூசை குறுக்கோல் போவதையும் எண்ணி ஏங்குகின்றனர். பொருளாதாரக் கண்டுக் கோப்புடன் நாம் வாழ வேண்டும். விஞ்ஞானக் கருத்துக்கள் எமது வாழ்வோடு ஒன்றுபட்டவையாதலால் இந்நூலை எழுதியஆசிரியரை நாம் பாராட்டுவதுடன் அவருடைய முயற்சிக்கு ஊக்கம் கொடுத்து ஒரு விஞ்ஞான சஞ்சிகையை வெளியிட ஊக்கம் கொடுக்க வேண்டும்" என்று கூறினார். முதல் பிரதியை பண்டிதர் அ. ஆறுமுகம் பெற்றுக் கொண்டார். திருவாளர்கள் எஸ். சிவஞானம், செ. பத்மநாதன், மு. நவரத்தினம், மு. சிவராசா, ப. இராசதுரை உட்பட மற்றும் பலர் பேசினர்.

கொழும்பில் பண்டிதமணிக்கு பட்டமளிப்பு விழா

"காலம் தாழ்த்தியே பாராட்டுகிறோம்"

கொழும்பு, செவ்.

"நமது நாட்டுக் கலைகளை நாம் நன்கு போற்றுதல் வேண்டும். நமது நாட்டுக் கலை நூல்களுக்குள் எத்த புராணம் உயர்ந்தது. கந்த புராணத்தின் கருவூலமான தக்ஷாண்டத்துக்கு உரை எழுதிய பண்டிதமணி அவர்களுக்குச் சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் என்ற விருதை வழங்கும் சரித்திரப் பிரசித்தியாய்த்த இவ்வைபவத்துக்குத் தலைமைதாங்கக் கிடைத்ததே பெரும் பாக்கியம். பண்டிதமணி களபதிப் பிள்ளை சான்றோர் வரிசையைச் சேர்ந்தவர்."

நேற்று வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் இலங்கை சாகித்திய மண்டலத்தின் சார்பில் கந்தபுராணம் தக்ஷ காண்டத்துக்கு உரை எழுதிய வரலாறுமுகமாகச் 'சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர்' என்ற விருதை வழங்கும் வைபவத்துக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் வைத்திய கலாநிதி ஆ. சிவனடி தலைமையுரையில் போது குறிப்பிட்டார்.

கலாநிதி ஆ. சதாசிவம் வரவேற்புரை கூறினார்.

கலாச்சார அதிபர் திரு. ஹேமசிறி பிரேமவர்த்தன சிங்கள தமிழ்க் கலைஞர்கள் ஆக்க இலக்கியங்களுக்கு ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். சிறந்த கலைஞர்களுக்கு ஏற்றவகையில் சிறந்த கலைக் கூடங்கள் அமைக்கவேண்டும். சிங்கள மக்கள், தமிழ் மொழியையும், தமிழ்மக்கள், சிங்கள மொழியையும் கற்கவேண்டும். இலக்கியத் திறனாய்வாளர்கள் விசேடமாக இரு மொழிகளையும் நன்கு கற்றுத் திறமை பெறுவார்களேயானால் இரு மொழியில் சாகித்திய விழாவையும் ஒரே மொழியிலே நடாத்தமுடியும். பண்டிதமணி போன்ற நல்லறிஞர்கள் பொதுநலப்பணி மக்களிடையே வளர்க்க உதவிசெய்யவேண்டும். பண்டிதமணி அவர்களைப் பாராட்டுவதன் மூலம் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலமே பெருமைபெறுகிறது" என்று கூறி சாகித்திய மண்டலத்தின் உயர் உறுப்பினர் என்னும் விருதினை வழங்கினார்.

தொடக்கவுரை நிகழ்த்திய சர்வகலாசாலை தமிழ்ப் பேராசிரியர் திரு. வி. செல்வநாயகம் 'நமது பண்டிதமணி அவர்களின் திறமையை காலத்தாழ்த்தியே பாராட்டுகிறோம். எப்பொழுதோ செய்யவேண்டிய வேலையைச் செய்யாமல் விட்டு விட்டு இப்பொழுதுதான் நாம் கண் விழித்தோம். பண்டிதமணி அவர்களிடம் மிக உயர்ந்த பண்பான இலக்கிய வழி வெளிவந்தபோதே நமது அரசாங்கம் பண்டிதமணி அவர்களைக் கௌரவித்திருக்கவேண்டும். பண்டிதமணி அவர்கள் அரிய நூல்களை மேலும் ஆக்கித்தர வேண்டும் என்றார்.

பண்டிதமணி நன்றி தெரிவித்தார்.

பண்டிதமணி திரு. கி. கணபதிப்பிள்ளை நன்றி தெரிவித்துப்பேசுகையில் கூறியதாவது:-கந்தபுராணச் சார்பில் பெருமைதந்த சாகித்திய மண்டலத்துக்கும், மண்டலச் சார்பில் பாராட்டுரை வழங்கி, பரிசிலும்—விருதும் வழங்கிய கலாசார அதிபர் திரு. ஹேமசிறிபிரேமவர்த்தனாவுக்கும், சாகித்தியமண்டலத்தின் தமிழ்ப் பகுதி அறிஞர்களுக்கும், தலைவர் உள்ளிட்டோரனைவோர்க்கும்எனது நன்றியைமிக்க விநயத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் எழுத்துக்களையோ படித்த புத்தகங்களையோ பேணி வைத்திருக்கும் பழக்கம் எனக்கு இயற்கையில் அமையாது போய்விட்டது. பழைய நூல்கள் பதிப்பாவர் என்று வைத்துக்கொள்ளுங்கள் ஏடுகள் தேடுவதுபோல நான் எழுதிய கட்டுரைகளை நானே தேடவேண்டியவனாய் இருக்கிறேன். என் மாணவர்களின் உதவியால் அவைகள் ஒருவாறு வந்து கைகூடுகின்றன. வலந்திய கலாநிதிருஷ்டி விசேடத்தால் கட்டுரைத்தொகுதிகள் சிலவெளிவரக்கூடும். அவை [illegible] நாளை [illegible] எனக்கு [illegible] [illegible] [illegible]

திருமலை சென்.ஜோசெப்பை சென்.பற்றிக்ஸ் வென்றது

யாழ்ப்பாணத்தில் நடந்த விறுவிறுப்பான உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணக் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரிக்கு மிடையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றவினோபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், சென். பற்றிக்ஸ் கல்லூரி மிக திறமையாகவும் வேகமாகவும் விளையாடி 45—39 புள்ளிகள் வித்தியாசத்தால் சென். பற்றிக்ஸ் கல்லூரியை வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பத்தில் பிரதம விருந்தினர் டாக்டர் துரைரெத்தினத்துக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை சென். ஜோசப் கோஷ்டி திறமையாக விளையாடிய போதிலும், கோல்கள்போடும் பல சந்தர்ப்பங்களை, சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் பின்னணி வீரர்கள் தடுத்து நிறுத்தி விட்டனர்.

ஆட்டம் தொடங்கி 15 நிமிடங்களின் பின் சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் ஆல்ரின் [லாப்டன்] முதலாவது கோல் வேகமாகப் போட்டார். இதனைத்தொடர்ந்து சென். ஜோசப் கோஷ்டியின் வலது கர முன்னணி வீரர் ரெபக்கல் ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின் போது இரு கோஷ்டியினரும் தலா 1-1 கோலைப் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின் ஆட்டம் மிக ரசிப்பாகக் காணப்பட்டபோதிலும், சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்களின் வேகமான முன்னேற்றத்தை எதிர் கோஷ்டியின் பின்னணி வீரர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. இடைவேளையின் பின், ஆட்டம் முடிவடைவதற்கு 15 நிமிடங்கள் இருக்கும்போது சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் இடதுகர வீரர் மிகவும் வேகத்தில் இரண்டாவது கோலைப் போட்டார். இதன் பின் சென். ஜோசப் கோஷ்டியினர் மிக சாதுரியமாக விளையாடி, கோல்கள்போட பல தடவை கொண்டு சென்ற போதும், சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் கோல் காப்பு வீரர் மிக திறமையாக தடுத்து விட்டார். இச் சந்தர்ப்பத்தில் சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் வலது உள்முன்னணி வீரர் அல்ரன் மேலும் ஒரு கோலைப் போட்டார். ஆட்டம் முடிவடையும் போது சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர் கல்லூரியை 8—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. தேவபாலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

சென. ஜோசப் வெற்றி

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரிக்கு மிடையில் நடைபெற்ற கினோபூர்வமான கால்பந்தாட்டப் போட்டியில், சென். ஜோசப் கல்லூரி மிக திறமையாகவும் வேகமாகவும் விளையாடி 45—39 புள்ளிகள் வித்தியாசத்தால் சென். பற்றிக்ஸ் கல்லூரியை தோற்கடித்தது இப்போட்டி "லோறன்ஸ்" திடலில் நடைபெற்றது. (தே. நி.)

பூமிக்கடியில் அணு சோதனை

நியூயோர்க், நவ. 5 அமெரிக்கா பூமிக்கடியில் நேற்று அணு ஆயுதமொன்றை வெடிக்கச் பரிசோதித்திருக்கிறது.

இந்துக்கல்லூரி வெற்றி

சுழிபுரம், செவ்வாய் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டக் போஷ்டிக்கும், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி இரண்டாம் பிரிவு போஷ்டிக்கு மிடையே கினோகிக பூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி 5—1 கோல்களால் வெற்றி பெற்றது.

போட்டி பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. திரு. வே. நாகராசா [illegible] கடமையாற்றினார்.

தொழிலமைச்சர் நன்றி

கொழும்பு, செவ். திருக்குர் ஆனின் 1400வது ஆண்டுவிழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் கொழும்பு கதிரேசன் விளையாட்டரங்கில் நடைபெற்றபோது, கல்வி அமைச்சர் ஐ. எம். ஆர். ஏ இரியகொல்லுக்கும், அவரது அமைச்சுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் தொழிலமைச்சர் திரு. எம். எச். முஹமத்.

குடிசைகள் அகற்றப்படும்

அச்சுவேலி செவ். அச்சுவேலி கொலனிப் பகுதியில் மத்திய வகுப்பாருக்கென வழங்கப்பட்ட முடிக்குரி நிலத்தில் அத்து மீறி அமைக்கப்பட்ட குடிசைகளை அகற்றுவிக்கும்படி இப்பகுதி காரியாதிகாரி க்கு யாழ்ப்பாணம் கேலிக் வரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

மாயமாக மறைந்தது

காங்கேசன்துறை, செவ். காங்கேசன் துறைக்கு அடுத்த ஊறணிக் கிராமத்தில் ஆர்ச். அந்தோனியார் தேவாலயத்திற்கு முன்னால் இருந்த தபால் பெட்டி மாயமாக மறைந்துவிட்டது.

பல மடங்கு பயன் பெற

பாவியுங்கள்

திறீ ரோஸஸ்

தரத்தை நாடும் புகை பிடிப்பாளர், வேறெதை கொடுத்தாலும் விட்டு மாற விரும்பாத சிறப்புகள் சில உண்டு. சுவை அவற்றில் ஒன்று — செறிந்த சுவை! நேர்த்தியான புகையிலைக் கலவை மற்றது. அதுவே உண்மையான திருப்தி தரும் புகைபிடி இன்பத்தை எப்போதும் அளிப்பது.

இந்தச் சிறப்பெல்லாம் சேர்ந்த ஒரே சிகரெட்தான் — திறீரோஸஸ்

அது இலங்கையின் அபிமான சிகரெட்டாகத் திகழக் காரணம் அதுவே!

தரத்தை நாடுவோர் அதை விடச் சிறப்புக் குறைந்ததை நாடாமலிருக்கக் காரணமும் அதுவே!

திறீ ரோஸஸ்—முற்றிலும் சுவையான முழுத் திருப்தி தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொக்கவுடி

உதைபந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், புதன் யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினரால் சகல விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படுவதும் "தொக்கவுடி" உதைபந்தாட்டப் போட்டியில் வருகிற 8-ந்திகதி சனிக்கிழமை விளையாட்டுக் கழகமும், குருநகர் "சிகிகிபிக்" விளையாட்டுக் கழகமும் மீண்டும் மோதவிருக்கின்றன. 9-ந் திகதி காலைநகர் கடற்கரைக் கோஷ்டியும் மயிலிட்டி புளூஸ் விளையாட்டுக் கழகமும் மோதும் இவ்விரு போட்டிகளும் யாழ் விளையாட்டரங்கிலிருந்தடைபெறும். [தே. நி]

மன்டைதீவு மகாவித்தியாலய

மூன்று மாணவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், புதன்

கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடத்திலிருந்த "ஸ்பிரிட்" போத்தல் ஒன்று திடீரென வெடித்தது. இதனால் மூன்று மாணவர்கள் எரிகாயங்களால் படுகாயமடைந்தனர். இதில் ஒரு மாணவர் இப்போது உயிருக்காக போராடிக் கொண்டிருக்கிறார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றதாக பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் படுகாயமடைந்து தற்போது யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் வேலாயுதன் (12 வயது) விநாயகமூர்த்தி (13 வயது) ஆகிய மூன்று மாணவர்களில் சிவபாலனே அபாயகரமான நிலையில் இருப்பவராவார்.

நேற்று கல்லூரி விடுமுறை தினமாக இருந்த போதும் கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடத்தில் ஆசிரியர் விஞ்ஞான பரிசோதனையொன்றை மாணவர்களுக்கு செய்து காட்டிக் கொண்டிருந்ததாகவும், அந்த வேளையிலேயே 'ஸ்பிரிட்' போத்தல் வெடித்து தீ பற்றியதாகவும் 3 மாணவர்களும் எரிகாயங்களுக்குள்ளானதாகவும் விசாரணையில் போது தெரிவிக்கப்பட்டது. புலன் விசாரணை மேலும் நடைபெறுகின்றது. [ஸ. நி]

யாழ் ஆஸ்பத்திரியில்

நோயாளிகள், தாதிகள் ஓடி ஒழித்தனர்

யாழ்ப்பாணம், புதன்

வார்ட்டிலிருந்த தகரங்கள் வெளியே வீசப்பட்டன. படுக்கை விரிப்புகள் தாறுமாறாகக் கிழிக்கப்பட்டன. நோயாளிகளின் சிகிச்சை விபரப்பட்டியல்கள் கத்தி நாலாகக் கிழிக்கப்பட்டன. இவைகளைச் செய்தவர்கள் ஒரு 'ஆட்டக்காரர்' தானும்.

இந்த 'ஆட்டக்காரனின்' ஆட்டங்களைத் தொடர்ந்து முடியாத வார்ட்டிலிருந்த நோயாளிகளும், நோயாளிகளுக்கு தாதிகளும் அறைகளுக்குள் ஓடி ஒழித்தார்களாம். நல்ல சமயத்தில் அங்கு சென்ற ஆஸ்பத்திரி பொலிஸ் காரர்களிடம் மேலதாதி அந்த 'ஆட்டக்காரனை' ஒப்படைத்தார்.

இச்சம்பவம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலுள்ள 14-ம் வார்ட்டில் நேற்று நள்ளிரவு நடைபெற்றது. ஏற்கனவே இரு தடவைகள் அங்கொட மனநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று திருப்பியனுப்பப்பட்ட ஆஸ்பத்திரி 'ஆட்டக்காரன்' பரந்தாமன் என்பவரே நேற்று நள்ளிரவு தனது வார்ட்டில் இந்தச் 'திருவிளையாடல்' களைச் செய்தவராவார்.

ஆஸ்பத்திரிச் சங்கிலி வைத்திய ராக பரிசோதனை செய்யப்பட்ட பிள்ளை இவர் இப்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். அவரை இன்று யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்திட பொலிஸார் ஆஜர் செய்வார்கள். [ஸ. நி.]

அண்ணன் தங்கையை வெட்டினார்

யாழ்ப்பாணம், புதன்

அண்ணனுக்கு கடிகாயம், தங்கைக்கு வெட்டுக்காயம், இருவரும் இப்போது யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அரியாலையைச் சேர்ந்த பூபாலசிங்கமும், இராஜமணியுமே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பவர்களாவர்கள். அண்ணன் தான் தங்கை வெட்டிய தாக தங்கையான இராஜமணி பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

ஆனால் அண்ணனான பூபாலசிங்கத்துக்கு கடிகாயம் எவ்வாறு ஏற்பட்டதென்பது தான் பொலிஸாருக்கு இன்னமும் தெரியாமல் இருக்கிறதாம்.

யாழ்ப்பாணம் பொலிஸார் இது பற்றிய விசாரணையில் இப்போது ஈடுபட்டுள்ளனர். [ஸ. நி]

வின்ஸர்

(புதிய கட்டிடம்)

யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்: 10-30, 2-30, 6-30, 9-45

கிளாஜி கணேசன் — பத்மினி — K. R. விஜயா

நாகேஷ் — மனோரமா

நடித்த

இரு மலர்கள்

நிக்கற் விபரம்:-

மலகனி — ரூபா 3-00 வரி உட்பட

நிசேவ்ட் — ரூபா 2-50 வரி உட்பட

முதலாம் வகுப்பு — ரூபா 2-00 வரி உட்பட

இரண்டாம் வகுப்பு — ரூபா 1-50 வரி உட்பட

கலரி (கதிரை) — சதம் 75 வரி உட்பட

இப் பத்திரிகை சமநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிளை கோவில் மேலவீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ந் திகதி அச்சிடு செய்யப்பட்டது

பாரத கூட்டுறவு சங்க தலைவர்

கரவிபுரம், செவ்வாய்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள பாரத கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. யுவராஜ் உதயசங்கரி மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையை பார்வையிட்டார். திரு. எஸ். சிவானந்தன் அவரை வரவேற்றார். திரு. உதயசங்கரி கூட்டுறவு வைத்தியசாலையின் வளர்ச்சியையும், அதற்கு ஏனைய சங்கங்கள் உதவ வேண்டிய முறைகளையும் எடுத்து விளக்கினார்.

குழந்தைகள் பிறப்பு இங்கு குறைவு

யாழ்ப்பாணம், புதன்

சங்கானைப் பட்டினசபைப் பகுதியில் வசிப்பவர்களில் மிகக் கூடுதலான தொகையினர் 21 வயதுக்குக் மேற்பட்டவர்களே 21 வயதுக்குக் குறைந்தவர்கள் இங்குள்ள சனத்தொகையில் ஐந்தில் இரண்டு பங்கு தான்.

இந்த விபரங்கள் சங்கானைப் பட்டின சபையின் 1967-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையிலிருந்து தெரிய வந்துள்ளது. இங்குள்ள மொத்தச் சனத்தொகை 5577 இதில் 21 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர் தொகை 3297 ஆகும் எனவே மிகுதி 2280 பேர் தான் இங்கு வசிக்கும் இருபத்தி ஒரு வயதுக்குக் குறைந்தவர்களாவர்.

இந்த ரீதியில் இங்கு ஆண்டு தோறும் குழந்தைகள் தொகை குறையுமானால் சங்கானைப் பகுதி ஒருங்கமைக்கட்டுப்பாட்டை அனுசரிக்குள் ஒரு இடமாக யாழ். மாவட்டத்தில் சங்கானைப் பகுதியே முதலிடம் கிடைக்கலாமெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ஸ. நி.]

நேற்று திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் 'லக்சரசலுசவ' இனை விநாயகர் நேற்று திறந்து வைக்கப்பட்டது. நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் வீதியில் இன்று இந்த விநாயகர் திறந்தவைக்கப்பட்டது.

பட்டதாரி வகுப்பு கல்லூரி

இந்து மகளிருக்கு

வல்லுக்கோட்டை, செவ்.

காந்தி அடிகளின் நூற்றாண்டுவிழாவை கொண்டாடும் முகமாக காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஏ. தியாகராசா காரைநகர் கிராமத்தில் ஆக்கவேலைகள் செய்யத் திட்டங்கள் தீட்டியுள்ளார். இத்திட்டத்தின்படி இந்துமகளிர் பட்டதாரி வகுப்புக்கள் கொண்ட கல்லூரி ஒன்றையும். இக்கல்லூரி 1969ம் ஆண்டு மே மாதத்திலிருந்து செயற்படும் என்று தெரியவருகிறது.

இந்துப் பெண்களுக்குத் தேவையான 12 பாடங்களில் இக்கல்லூரியில் போதனை வசதிகள் செய்தளிக்கப்படுமென்றும் 17 வயதிற்குமேற்பட்ட பெண்கள் மட்டுமே இக்கல்லூரியில் சேர்க்கப்படுமென்றும் பொதுக்கல்வித் தராதர சாதாரண வகுப்பில் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் அதன் அடுத்த இரு ஆண்டுகளில் ஜி.சி.ஈ. [சாதாரணம்] வகுப்பு பரீட்சைக்கு தோற்றியவர்களுமே அனுமதிக்கப்படுவர் என்றும் இக் கல்லூரியில் நான்கு ஆண்டுப் பயிற்சி [illegible] மென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வடபகுதி கல்வி இலாகாவுக்கு வந்துள்ள சுற்றுநிருபம்

யாழ்ப்பாணம், புதன்

"சகல அரசாங்க சாசனங்களும் அரசகரும மொழியிலேயே எழுதப்படவேண்டும்"

இந்த உத்தரவை அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் திரு. பீட்டர் அமலசேகரா திணைக்கள சுற்று நிருபம் ஒன்றின்மூலம் வடபகுதி கல்வி இலாகாவுக்கு தெரிவித்துள்ளார்.

வடபகுதி கல்வி அலுவலகத்திற்கு கிடைத்துள்ள இச் சுற்றுநிருபம் இங்கு அரசகரும மொழியில் கடமை மாற்றத்தகுதிபெற்ற சொற்ப ஊழியர்களுக்குப் பெரும் பிரச்னையையும் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

சகல சாசனங்களும் அரசகரும மொழியிலேயே எழுதப்படவேண்டுமென்றும், சாசனங்களைப் பெறுபவர் அதற்கு விளக்கம் கேட்டால் தமிழ் அல்லது சிங்களத்தில் விளக்கம் கொடுக்கவேண்டுமென்றும், விளக்கத்தை ஒரு தனியே எழுதித் தருமாறு பெறுபவர் கேட்டால் எழுதியும் கொடுக்கலாமென்றும் இச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தைத் தொடர்ந்து வடபகுதிக்கல்வி அலுவலகத்தில் இதற்கான நிர்வாக நடவடிக்கைகளும், ஒழுங்குகளும் இப்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. வடபகுதி ஆசிரியர்களினதும். கல்வி இலாகா ஊழியர்களினதும் அடுத்த வாரச் சம்பளக் காசோலை அரசகரும மொழியான தனிச்சிங்களத்திலேயே கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச கரும மொழியில் வேண்டியதகுதிபெற்ற ஊழியர்கள் இங்கு குறைவாக இருப்பதால் இவற்றில் அதிக தாமதம் ஏற்படலாம் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஸ. நி.)

அபேட்சகர்கள் சுப்பிரிண்டன் சந்திப்பு

யாழ்ப்பாணம், புதன்

நேற்று காலை 4 மணிக்கு யாழ். நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் 72 அபேட்சகர்களையும் சந்தித்ததேர்தல் சட்டங்களைப்பற்றி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சந்தரலிங்கம் விளக்கினார்.

லொத்தர் .....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கு ரூ. 485 தொடக்கம் ரூ. 550 வரையும் பட்டதாரிகளுக்கு ரூ. 540 தொடக்கம் ரூ. 630 வரையும் பயிற்றப்பட்ட பட்டதாரிகளுக்கு ரூ. 600 தொடக்கம் ரூ 700 வரையும் கேட்பதெனக் கருத்துப் பரிமாறப்பட்டது.

ஆசிரிய சங்கங்களின் ஆலோசனைச் சம்மேளனம் லொத்தர் சீற்றுகளை ஆசிரியர்கள் செய்யக்கூடாது என்றொரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது பிக்கோவின் கல்வியோடு சம்பந்தமில்லாத விடயங்களில் ஆசிரியர்கள் பங்கு பற்றுவது தவறு என்பதை அங்கத்தவர்கள் பலரும் சுட்டிக்காட்டினர்.

ஆசிரியர்களுக்கு பொதுமக்கள் மத்தியிலும் அரசாங்கத்திலும் நியாயமான கோரிக்கைகள் கிடைக்கத் தக்க வழிவகைகள் ஆராய ஜவர்கொண்ட குழுஒன்று நியமிக்கப்பட்டு முதலாவது கூட்டமும் நடைபெற்றது.

அகில இலங்கைத் தமிழ் சிங்கர் சங்கம், அகில இலங்கை அரசினர் தமிழாசிரியர் சங்கம், அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கம், கலாநிதி பயிற்சிபெற்ற ஆசிரியர் சங்கம் முதலான பல ஆசிரியர்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நெரியுண்டு மரணம்

புலோலி, செவ்வாய்

புலோலி மேற்கில் வசிக்கும் திரு. பெ. சின்னப்பா அல்லது சின்னப்பு [வயது 60] என்ற வயோதிபர் வண்டிச் சில்லுக்குள் நசியுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார்.

இச் சம்பவம் பருத்தித்துறையில் நடந்துள்ளது. இறந்தவர் சவாரிசெய்த வண்டியிலிருந்து தவறி விழுந்து வண்டிச் சில்லுக்குள் அகப்பட்டு மரணமானார்.

பருத்தித்துறை நீதிபதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரணவிசாரணை நடத்தினார்.

மரணவிசாரணையில் திரு. எஸ். கணபதிப்பிள்ளை சாட்சியமளிக்கையில், தாம் பருத்தித்துறைக்குப் போகும்வழியில் இறந்தவர் வண்டியிலிருந்து விழக்கண்டதாகவும் உடனே வண்டிச்சில்லு அவரின்மீது ஏறியதாகவும் அவ்விடத்திற்கு ஓடிச்சென்று பார்த்தபோது நிலத்தில் அதிகஇரத்தம் ஓடியிருந்ததாகவும் தாம் போட்ட சத்தத்திற்கு அவ்விடத்துக்கு கிட்டவந்து சேர்ந்தவர்களும் பிள்ளை அவரைத் தூக்கிக்கொண்டு அவரின் வீட்டிற்குக் கொண்டுபோய் டாக்டர் திரு. சே. பத்மநாதனை வரவழைத்துக் காட்டியதாகவும் டாக்டர் பார்த்து விட்டு இறந்தவர் உயிர் பிரிந்து விட்டதாகக் கூறினாரென்றும் தெரிவித்தார்.

இறந்தவரின் மனைவி பாக்கியம், டாக்டர் திரு. சே. பத்மநாதனும் சாட்சியமளித்தனர்.

பருத்தித்துறை நீதிபதி மரணவிசாரணை அதிகாரி விபத்தினால் ஏற்பட்டமரணமெனத் தீர்ப்பு அளித்தார்.

மது விலக்கு

7வருடகால வரம்பு

புதுடில்லி, நவ. 5

மதுவிலக்கை நாடுமுழுவதும் அமுலாக்க 7 வருடகால வரம்பு விதிப்பதென இன்றுகூடிய அகில பாரத காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்தது.

யூகோஸ்லாவியா பூகம்பம்

யூகோஸ்லாவியா, நவ. 5

யூகோஸ்லாவியா தென்மேற்குப் பகுதியிலேற்பட்ட நில நடுக்கம் காரணமாக பல வீடுகள் நாசமடைந்தன என்றும், ஒருவர் மரணமானார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாஸ்கோவில் கியூபா அமைச்சர்

மாஸ்கோ, நவம்பர் 5

கியூபாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே 1969-ம் ஆண்டுக்கான வர்த்தகப் பரிவர்த்தனை பற்றிய பேச்சுவார்த்தை இங்கு நடைபெறும். இதற்காக கியூபா வர்த்தக அமைச்சர் மார்செலோ பெர்னான்டேஸ் மாஸ்கோ வந்தார்.

நீண்டகால வர்த்தக ஒப்பந்தத்தின்கீழ் [1965-1970] இந்த உடன்பாடு செய்து கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org